**20.07.2022**

**OS.No. 389/2019 PW : 1, திரு. சந்திரசேகரன்**

**6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

நான் 12ம் வகுப்புவரை படித்திருக்கிறேன். என்னுடைய தாத்தா மற்றும் சின்ன தாத்தா ஆகியோர்களின் சொத்துக்களை பற்றி எனக்கு நன்றாக தெரியும். என் சின்ன தாத்தாவின் அனுபவத்தில் உள்ள சொத்துக்களில் பாகம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்துக்கள் வீடா, நிலமா என்று பிராதில் சொல்லியிருக்கிறேன். என் தாத்தாவிற்கு 4 ஆண் குழந்தைகள், என் சின்ன தாத்தாவிற்கு 1 ஆண் குழந்தை, 3 பெண் குழந்தைகள். 6 முதல் 9 பிரதிவாதிகள் என் வீட்டிற்கு பின்புறம் குடியிருக்கிறார்கள். அவர்களிடம் முதலில் பேசிக்கொண்டிருந்தோம். பின்பு பேசவில்லை. கடந்த 20 வருடமாக அவர்களுடன் பேச்சுவார்தை இல்லை. வழக்கை தாக்கல் செய்தவற்கு முன்னர் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினோம். அந்த அறிவிப்பை தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் என் வழக்கறிஞர் தாக்கல் செய்திருக்கிறார். (ஆவணங்களை பார்த்துவிட்டு அறிவிப்பை அனுப்பவில்லை என்று வழக்கிறிஞர் கூறுகிறார்.) 6 முதல் 9 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துபார்த்தேன். என் தாத்தா தான் குடும்பத்தின் மூத்தவர் என்பதால் அவரிடம் சொத்தின் அசல் ஆவணங்கள் இருந்தது என்றும் அவருக்கு பின் என் தந்தையிடமும் அதற்கு பின் எங்களிடமும் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா வாங்கியதால் ஆவணங்கள் அவரிடம் இருந்தது. என்

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:41:29 +0530

தந்தையின் உடன்பிறந்தவர்கள் என் சின்ன தாத்தாவின் வாரிசுகள் ஆவணங்களை எங்களிடம் கேட்டார்கள் என்றும் நாங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் ஆவணங்களை கேட்டகவில்லை. என்னுடைய தந்தையின் அண்ணனான முனுசாமி என்பவரின் சொத்தையும் நான் ஆக்கிரமித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பாகம் என்று கூறி என் வீட்டிற்கு பின்புறம் என் தாத்தா காம்பவுன்ட் சுவர் கட்டியிருக்கிறாரா என்று கேட்டால் அவ்விதம் இல்லை. 1985ல் என் தாத்தாவிடம் என் சின்ன தாத்தா இருப்பதற்கு இடம் கேட்டார். அதன்படி என் தாத்தா அவர்களை இருக்கும்படி சொன்னார். 1 முதல் 5 பிரதிவாதிகள் என் தாத்தாவின் வழி வந்தவர்கள், 6 முதல் 9 பிரதிவாதிகள் என் சின்ன தாத்தாவின் வழி வந்தவர்கள். என் தாத்தா கிரையம் வாங்கும்போது நான் பிறக்கவில்லை. ஆகவே சொத்து எந்த சூழ்நிலையில் வாங்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் கிரைய ஆவணத்தை படித்து பார்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். என் தந்தை மற்றும் அவர் உடன்பிறந்தவர்களுக்கு சொத்துக்களை பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். பிராதில் 2வது அயிட்ட சொத்தில் நான் கற்களை நட்டபோது தான் பிரச்சனை ஏற்பட்டது. எங்களுடைய வீட்டிற்கும் 6 முதல் 9 பிரதிவாதிகள் குடியிருக்கும் வீட்டிற்கும் இடையே இடைவெளி இருக்கிறது. அது காலியிடமாக இருக்கிறது. 6 முதல் 9 பிரதிவாதிகள் குடியிருக்கும் இடத்தை பொறுத்து என் தாத்தாவோ, என்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:41:34 +0530

தந்தையோ வழக்கை தாக்கல் செய்யவில்லை. பொதுவாக குடும்பத்தில் மூத்தவர்கள் பெயரில் தான் சொத்துக்களை வாங்குவார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொதுவாக கிரையம் வாங்கும்போது கிரைய பத்திரத்தில் கிரைய பணத்தை கொடுப்பதாக எழுதுவார்கள் ஒழிய கூட்டுகுடும்ப சொத்து என்று எழுதமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. 7 மற்றும் 8 பிரதிவாதிகள் வீடு மற்றும் நிலத்தை என் தந்தைக்கு கொடுக்க ஒப்புக்கொண்டதாக என் முதல் விசாரணையின் 6வது பாராவில் கூறியிருக்கிறேன். அதற்கான ஆவணங்கள் இல்லை. முதல் விசாரணையின் 7வது பாராவில் குப்புசாமி ரெட்டியை அணுகிகேட்டது சம்பந்தமாக ஆவணங்கள் இல்லை. 2013ல் என் தாத்தா என் தந்தைக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் என் தாத்தாவின் சொத்துக்கள் தான். என் அப்பாவின் உடன்பிறந்தவர்கள் செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஏன் கையொப்பம் போடவில்லை என்று கேட்டால் என் அப்பாவிற்கு சொத்துவந்து அவர் பெயரில் பட்டா 459 ஏற்பட்டுவிட்டதால் மற்றவர்கள் கையொப்பம் போடவில்லை. என் தந்தையின் உடன்பிறந்தவர்கள் கையெழுத்து போடதபோது எங்கள் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஏழுமலை ரெட்டி பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் ஏழுமலை ரெட்டி கட்டியது தான். அந்த தீர்வை ரசீதுகள் பி.வா.சா.ஆ.1. (வரிசைகள்). அது 1968ம் வருடம் கட்டப்பட்ட தீர்வை ரசீதுகள்.

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:41:40 +0530

1985ல் என் சின்ன தாத்தா வாரிசுகள் தங்குவதற்கு இடம் வேண்டுமென்று கேட்டதாக என் தந்தை சொல்லிதான் எனக்கு தெரியும். 2008ல் சொன்னார். திருத்தணி நீதிமன்றத்தில் நடந்த வழக்குகளில் என் சின்ன தாத்தாவின் வாரிசுகள் இருப்பதற்கு இடம் வேண்டுமென்று அனுமதி கேட்டதாக என் தந்தை சொல்லவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்குகளை நான் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை அவ்வழக்கில் ஆஜர் ஆனார். என் தந்தை சொன்ன விவரத்தை அவ்வழக்கில் சொல்லியிருக்கிறோமா என்று கேட்டால் நாங்கள் சொல்வதற்கு முன்னரே அவ்வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. நாங்கள் தற்போது இருக்கும் இடத்தில் ஒரு ஓடுபோட்ட வீடு இருக்கிறது. ஒரு புதுவீடும் இருக்கிறது. தாவா சொத்துக்களில் எங்களுக்கு பங்குகொடுக்க 1 முதல் 5 பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதாக முதல் விசாரணையில் 9வது பாராவில் கூறியுள்ளேன். 6ம் பிரதிவாதிக்கு எழுத, படிக்க தெரியுமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதிக்கு காதுகேட்குமா என்று எனக்கு தெரியாது. என்னுடைய தந்தையும் அவரது உடன்பிறந்தவர்கள் நன்றாக படித்தவர்கள் என்று சொன்னால் சரியல்ல. 08.01.2001 தேதியிட்ட பாக ஆவணத்தில் என் தந்தை கையொப்பம் போடவில்லை. அதில் என் தந்தை ஒரு தரப்பினரும் இல்லை. அதில் என் தந்தையின் பாகத்தை பற்றி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் தற்போது விவசாயம் செய்யும் இடத்தையும், நாங்கள் குடியிருக்கும் இடத்தையும் அந்த பாக

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:41:46 +0530

ஆவணத்தில் சேர்த்திருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. சாட்சி அந்த பாக ஆவணத்தை பார்த்துவிட்டு எங்கள் அனுபவத்தில் உள்ள சொத்துக்கள் அந்த ஆவணத்தில் இருப்பதாக சாட்சியம் அளிக்கிறார். எங்களுக்கு தெரியாமலேயே எங்கள் சொத்துக்களை அதில் சேர்த்திருக்கிறார்கள். அந்த சொத்துக்களை பொன்னன் பாகத்திற்கும் மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகளையும் காட்டியிருக்கிறார்கள். என் தந்தையின் பெயர் அந்த பாக ஆவணத்தில் இல்லாத போது வா.சா.ஆ.8 பாக ஆவணம் என் கையில் எப்படி கிடைத்தது என்று கேட்டால் என் பெரியப்பா கொடுத்தார். எங்களது பாகத்தை விட்டுவிட்டு தான் வா.சா.ஆ.8ன் படி பாகத்தை செய்துகொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்க தெரியாது. 2013ல் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு தாய் பத்திரம் இருக்கிறதா என்று கேட்டால் என் தாத்தா பெயரில் உள்ள பத்திரம் இருக்கிறது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எவ்விதம் 12½ சென்ட் 352 சதுர அடி மாட்டுகொட்டகை என்று எப்படி எழுதினோம் என்று கேட்டால் சர்வேயர் அளந்து பட்டா கொடுத்தால் அவ்விதம் எழுதப்பட்டது. அந்த சொத்து எங்கள் அனுபவத்தில் இருக்கிறது. அது கிராம நத்தமாக மாற்றி கொடுத்தார்கள். எங்கள் அனுபவத்தில் உள்ள சொத்திற்கு என் தந்தை செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிக்கொடுத்திருக்கும்போது 6 முதல் 9 பிரதிவாதிகள் இருக்கும் இடத்தை பொறுத்து 08.01.2001 தேதியிட்ட பாக ஆவணத்தை எழுதி கொள்ளமுடியும் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுத்த

S
GANAPATHISAMY
Digitally signed by
S
GANAPATHISAMY
Date: 2022.07.22
18:41:52 +0530

புகார் என்ன ஆனது என்று கேட்டால் சிவில் நீதிமன்றத்தை நாடுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். என்னுடைய வீட்டு பென்சிங்-ஐ என்னை குறுக்கு விசாரணை செய்யும் வழக்கறிஞர் தான் உடைத்துவிட்டார். 6ம் பிரதிவாதி எங்கள் மீது நாங்கள் பென்சிங் போடுவதாக ஒரு புகார் கொடுத்தார். அந்த புகாருக்கு நான் எழுதி கொடுத்தேன் என்று கேட்டால் இருதரப்பினரும் நீதிமன்றத்திற்கு செல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். காவல் நிலையத்தில் விசாரித்த போது பிரச்சனை செய்யமாட்டோம் என்று நான் எழுதி கொடுத்துவிட்டு வந்தேன். நான் கொடுத்த வாக்குமூலத்தில் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது பி.வா.சா.ஆ.2. என்னிடம் காட்டப்படும் கடிதத்தை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முதலமைச்சர் பிரிவுக்கு அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது. என் தந்தையின் உடன்பிறந்தவர்கள் 2001ம் வருடத்தைய பாக ஆவணம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை. 6 முதல் 9 பிரதிவாதிகள் மீது மட்டும் ஏன் வழக்கை தாக்கல் செய்தோம் என்று கேட்டால் எங்களுக்கு தெரியாமல் 2001 பாக ஆவணத்தை எழுதி கொண்டதால் வழக்கை தாக்கல் செய்தோம். என் தந்தையின் உடன்பிறந்தவர்கள் பாக ஆவணத்தில் கையொப்பம் போட்டுவிட்டதால் அவர்கள் மீது சொத்தில் பாகம்கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்யவில்லை. 6ம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார். ஆனால் 2002ல் காலமானாரா என்று எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டார். 9ம் பிரதிவாதியின்

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:41:57 +0530

கணவரும் இறந்துவிட்டார். மல்லிகா என்பவரின் கணவர் இறந்துவிட்டார். 6ம் பிரதிவாதியின் குழந்தைகள் அரசியலில் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 6 முதல் 9 பிரதிவாதிகள் விவசாயம் செய்கிறார்களா என்று கேட்டால் அதில் சிறு சிறு செடிகள் இருக்கிறது. 6 முதல் 9 பிரதிவாதிகள் அடியாட்கள் மற்றும் செல்வாக்கு உடையவர்கள் என்று நான் சொல்வது சரிதானா என்று கேட்டால் என் பென்சிங்-ஐ உடைத்துவிட்டதால் அது சரிதான். என்னிடம் காட்டப்படும் கூரைசீட்டு விஜயகுமார், முனுசாமி, முருகன் மற்றும் என் தந்தை கையொப்பம் போட்டார்களா என்று எனக்கு தெரியாது. அது கையெழுத்து போட்டவர்களை விசாரித்தால் அந்த ஆவணத்தை யார் எழுதி கொடுத்தார்கள் என்று தெரியுமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. என் தந்தை 49 சென்ட் 1999ல் கிரையம் கொடுத்தார். என் தந்தைக்கு ஏற்கனவே பாகம்கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் ஆகவே தான் என் தந்தையை 2001 பாக ஆவணத்தில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY
Date: 2022.07.22 18:42:02 +0530

I Additional District and Sessions Judge,
Tiruvallur.